# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

8075298

C

5/2021/AC/CB

1. District மாவட்டம் : Coimbatore PS: காவல்நிலையம் Vigilance and Anticorruption Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் Date: நாள் 04/02/2021 0900 hrs

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 7(a)

   (ii) Act சட்டம்: As amended by the Prevention Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 01.02.2021 Date to : நாள் வரை 03.02.2021

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 1100 hr Time to : நேரம் வரை 1815 hr

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.02.2021 Time : நேரம் 0800 h.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 04.02.2021 Time : நேரம் 0800 h.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer Tamil typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 30 km, South East direction

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Traffic unit, Sulur police Station Coimbatore District

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : - District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. MURUGAN (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் RAJI

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Painter (g) Address : முகவரி DNO 252/2A, Backside of R.J. School 100 feet road, Thirumurugan Nagar, Kalapatty, Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. MARUDHAPPAN . SI of Police, Traffic unit, Sulur police station, Coimbatore District

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

–

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு –

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் –

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: .../2021
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

G. Arumugam
Name: பெயர் Inspector of police
Rank: நிலை V-4 PPC, No/எண் Coimbatore

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.05/2021/AC/CB, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

04.02.2021–ம் தேதி வியாழக்கிழமை காலை 08.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோவை மாவட்டம், காளப்பட்டி, திருமுருகன் நகர், 100 அடி ரோடு, ஆர்.ஜே பள்ளிக்கு பின்புறம் கதவு எண்.252/2B ல் வசிக்கும் ராஜீ என்பவரது மகன் திரு.முருகன், வயது–30 என்பவர் கணினியில் தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகாரினை கோயம்புத்தூர் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்திற்கு நேரில் ஆஜராகி கொடுத்தார். அந்த புகாரின் அடிப்படையிலும், வாதி கொடுத்த குறுந்தகடில் பதிவு செய்யப்பட்டிருந்த உரையாடலை கணினியில் பதிவிறக்கம் செய்து கேட்டு பார்த்ததிலிருந்தும், மேலும் எதிரியின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகாரில் சொல்லப்பட்டது போல் புகார்தாரரிடம் சூலூர் போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் மருதையா என்பவர் புகார்தாரரின் இருசக்கர வாகனத்தை திரும்பி தர லஞ்சமாக பணம் ரூ.6,000/– கேட்டது தெரிகிறது. மேலும் புகார்தாரரின் முன்நடத்தை மற்றும் புகார்தாரருக்கும் எதிரிக்கு இடையே தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் அவரது புகார் நம்பகத்தன்மை கொண்டது என்றும் தெரியவந்தது. மேலும் புகார்தாரரிடம் பொறி வைப்பு நடவடிக்கைக்கு பற்றிய விவரம் கூறி பொறி வைப்பு நடவடிக்கைக்கு விருப்பம் இருப்பின் எதிரி கேட்ட லஞ்ச பணம் ரூ.6,000/– கொடுக்கவேண்டி அறிவுறுத்தப்பட்டது. அவரும் தான் பொறிவைப்பு நடவடிக்கைக்கு விருப்பம் தெரிவித்து பணம் ரூ.6,000/– கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். அதன் பேரில் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 04.02.2021 ம் தேதி காலை 09.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.5/2021/AC/CB u/s 7(a) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 ன்படி மேற்படி எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு – அனுப்புநர் R.முருகன், வயது–30, த/பெ. ராஜீ, கதவு எண்.252/2B, திருமுருகன் நகர், 100 அடி ரோடு,

ஆர்.ஜே பள்ளிக்கு பின்புறம், காளப்பட்டி, கோயம்புத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, கோயம்புத்தூர். அய்யா, நான் தற்போது கோவை மாவட்டம், காளப்பட்டி, திருமுருகன் நகர், 100 அடி ரோடு, ஆர்.ஜே பள்ளிக்கு பின்புறம் கதவு எண்.252/2B ல் தற்காலிகமாக தங்கியுள்ளேன். என்னுடைய சொந்த ஊர் தர்மபுரி மாவட்டம், நல்லம்பள்ளி தாலுகா, தொக்குபோதனஹல்லி அஞ்சல், வெள்ளக்கல் கிராமம், கதவு.எண்.5/163 ஆகும். நான் B.Com (C.A) படித்துவிட்டு, கடந்த 5 வருடமாக கோயம்புத்தூரில் கிடைக்கும் இடத்தில் பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். எனது சொந்த ஊர் அருகில் எனக்கு தெரிந்த நண்பர் ஹஸ்பத் என்பவர் அவரது அம்மா கொடக்காரி பெயரில் கடந்த நவம்பர் மாதம் 2018 ஆம் ஆண்டு இரு சக்கர வாகனமான Hero CD-Delux வாகன எண்.TN 29 BJ 8416 வாங்கினார். அவருடைய தொழில் சம்மந்தமாக பெங்களூரில் செட்டிலாகி விட்டதால் எனக்கு கோயம்புத்தூரில் என்னுடைய பயன்பாட்டிற்கு வாகனம் தேவை பட்டதாலும், ஹஸ்பத் அவர்களிடமிருந்து மேற்படி வாகனத்தை சுமார் 1 வருடமாக கோவையில் பயன்படுத்தி வந்தேன். இந்நிலையில் கடந்த 31.01.2021 ஆம் தேதி நீலம்பூரில் பெயிண்டிங் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது என்னுடன் வேலை செய்து கொண்டிருந்த கொத்தனார் பாலன் என்பவர் அருகில் உள்ள கடைக்கு சென்று வருவதாக கூறி என்னுடைய வண்டியை மதியம் சுமார் 12 மணிக்கு எடுத்து சென்றார். சற்று நேரத்தில் பாலன் என்னை செல்போனில் தொடர்பு கொண்டு நிலம்பூர், ராயல்கேர் மருத்துவமனை அருகில் சென்று கொண்டிருந்த போது சூலூர் போக்குவரத்து போலிசார் என்னுடைய வாகனத்தை எடுத்து சென்று விட்டதாக தகவல் சொன்னார். அதன்பேரில் நானும் அங்கு சென்று பார்த்தபோது அங்கு எனது நண்பர் பாலன் மட்டும் இருந்தார். நான் பாலனிடம் கேட்ட போது அதற்கு அவர் தான் வண்டி ஓட்டி வரும்போது சூலூர் போக்குவரத்து உதவி ஆய்வாளர் மருதையா அவர்களும் மற்றும் அவருடன் இருந்த போலிஸ்காரரும் வண்டியை நிறுத்தி வாயை ஊத சொன்னதாகவும், அதன்படி அவரும் ஊதியதாகவும், அப்போது உதவி ஆய்வாளர் அவரை குடிபோதையில் இருப்பதாக சொன்னதாகவும், அதற்கு அவர் குடிக்கவில்லை என்று சொன்னதாக தெரிவித்தாகவும், இருந்தாலும் போக்குவரத்து உதவி ஆய்வாளர் மருதையா அவர்கள் அவரிடமிருந்து வாகனத்தை பெற்று கொண்டு சூலூர் போக்குவரத்து காவல் நிலையத்திற்கு எடுத்து செல்வதாக கூறியதாகவும், அப்போது அவர் இது தன்னுடைய நண்பன் முருகன் என்பவருடைய வண்டி என்று கூறி வண்டியை கேட்டதாகவும், அதற்கு அவர் உன்னுடைய நண்பனையும் கூப்பிட்டு சூலூர் போக்குவரத்து காவல் நிலையத்திற்கு வரும்படி

அறிவுறுத்திவிட்டு சென்று விட்டதாக என்னிடம் தெரிவித்தார். அன்று பெயிண்டிங் வேலை செய்து கெண்டிருந்ததால் என்னால் சூலூரில் காவல் நிலையம் சென்று உதவி ஆய்வாளரை அவர்களை பார்க்க முடியவில்லை. அதனால் அடுத்த நாள் 01.02.2021 ஆம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு சூலூர் போக்குவரத்து உதவி ஆய்வாளர் மருதையா அவர்களை சூலூர் போக்குவரத்து காவல் நிலையத்திற்கு நானும் எனது நண்பர் பாலன் அவர்களும் நேரில் சென்று பார்த்தோம். அங்கு உதவி ஆய்வாளர் மருதையா அவர்களுடன் போலிஸ்காரர் ஒருவர் இருந்தார். அவரை பார்த்த பாலன் என்னிடம் இவர் தான் வண்டியை பிடிக்கும் போது உடனிருந்த போலிஸ்காரர் என்று கூறினார். பின்னர் நான் உதவி ஆய்வாளர் அவர்களிடம் பாலன் ஓட்டி வந்த வண்டி என்னுடைய வண்டி தான் என்று கூறி வாகனத்தை திருப்பி கொடுக்கும் படி கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் உன் வண்டியை குடிபோதையில் பாலன் ஓட்டி வந்ததால், மேற்படி வாகனம் திரும்ப வேண்டுமென்றால் அவருக்கு ரூ.12,000/- தனியாக கொடுக்க வேண்டும் என்று கேட்டார். அதற்கு நானும் பாலனும் உதவி ஆய்வாளர் அவர்களிடம் தாங்கள் பாலனை பிடிக்கும் போது அவர் குடிபோதையில் இல்லை என்றும், அவர் கொத்தனார் வேலை செய்து வருவதாகவும் கூறி எங்களால் இவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்று கெஞ்சி கேட்டு கொண்டோம். அப்போது உதவி ஆய்வாளர் மருதையா அவர்களின் அருகில் யூனிபார்மில் இருந்த போலிஸ்காரர் எங்களை பார்த்து டேய் கேஸ் எல்லாம் போட்டாச்சு இனி ஒன்னும் பண்ண முடியாது பணத்தை கட்டிவிட்டு வண்டியை எடுத்துவிட்டு போங்கடா என்று சத்தம் போட்டார். அதனை தொடர்ந்து உதவி ஆய்வாளர் மருதையா அவர்களும் என்னை பார்த்து ஏய் நீதாண்டா ஓனர் உனக்கு வண்டி வேண்டும் என்றால் ரூ.4,000/- குறைத்து கொண்டு ரூ.8,000/- கொண்டு வந்து கொடுத்தால் உனது வாகனத்தை கொடுப்பேன் என்றும் இல்லை என்றால் வாகனத்தை வழக்கு போட்டு பறிமுதல் செய்த விடுவேன் என்று திட்டவட்டமாக உதவி ஆய்வாளர் மருதையா தெரிவித்தார். அதனால் நானும் சரி சார் பணத்தை தயார் செய்து வருகிறேன் என்று கூறி எப்போ வர வேண்டு என்று கேட்ட போது அவருக்கு உதவியாக அருகில் இருந்த போலிஸ்காரர் செல் நெம்பர் 8148892324 ஐ கொடுத்து பேசிவிட்டு வா என்று கூறினார். பின்னர் நான் சரி என்று சொல்லி அங்கிருந்து புறப்பட்டு சென்றுவிட்டேன். அடுத்த நாள் எனக்கு பெயிண்டிங் வேலை இருந்ததால் என்னால் சூலூர் போக்குவரத்து காவல் நிலையம் செல்ல முடியவில்லை. நேற்று 03.02.2021 ஆம் தேதி மாலை சுமார் 06.15 மணிக்கு நான் மட்டும் போக்குவரத்து காவல் நிலையம் சென்று எனது வாகனம் சம்மந்தமாக உதவி

ஆய்வாளர் மருதையா அவர்களை பார்த்தேன். அப்போது அவர் பணம் ரூ.8,000/- கொண்டு வந்தீயா என்று கேட்டார். அதற்கு நான் அவ்வளவு பணம் ரெடி பண்ணமுடியலை பார்த்து உதவி செய்யுங்க, வண்டி இல்லாமல் கஷ்டமாக இருக்கு சார், பணத்தை கொஞ்சம் குறைத்து சொல்லுங்கள் என்று கெஞ்சி கேட்டேன். அதற்கு அவர் ஏற்கனவே நான் ரூ.4000/- குறைத்து விட்டேன், கேஸ் போட்டாச்சு, கோர்ட்டுக்கு போனால் ரூ.12,000/- கட்ட வேண்டும் என்றும், என்னிடம் கட்டினால் ரூ.8,000/- மட்டும் தான் என்று கூறினார். அப்போது உதவி ஆய்வாளர் மருதையா அவர்கள் போனில் ஒருவருக்கு தொடர்பு கொண்டு பாப்பம்பட்டி பிரிவு பார்க்கிங்கில் போடப்பட்ட வண்டியின் ஓனர் முருகன் வந்துள்ளதாகவும், வண்டியின் சாவியை காவல் நிலையத்திறகு கொண்டு வரும்படி கூறினார். அதன்படி சற்று நேரத்தில் உதவி ஆய்வாளர் மருதையா அவர்களுக்கு உதவியாக இருக்கும் மேற்படி போலிஸ்காரரும் அங்குவந்து சேர்ந்தார். மேலும் நான் உதவி ஆய்வாளர் மருதையா அவர்களிடம் இன்னும் கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்றும் கெஞ்சி கேட்டேன். அதற்கு அவர் ரூ.6000/- வாங்கிகொள்ள சம்மதம் தெரிவித்து பணம் ரூ.6,000/- கொடு என்று கேட்டார். அதற்கு நான் தற்போது ரூ.4,000/- மட்டும் தான் உள்ளது என்றும் கூறினேன். அதற்கு அவர் ஓட்டுக்கா பணம் ரூ.6,000/- கொடுத்தால் தான் எனது வாகனத்தை திருப்பி கொடுக்க முடியும் என்று கராராக கூறினார். அதற்கு நான் சூலூரில் உள்ள கலைஞர் கல்லூரிக்கு அருகில் எனது நண்பர்கள் பெயிண்டிங் வேலை செய்து வருவதாகவும், அவர்களிடம் கேட்டு பெற்று வர முயற்சிக்கிறேன் என்று கூறினேன். அதற்கு அவர் சரி போயிட்டு வா என்று அனுப்பிவைத்தார். அதன் பின்பு நான் சூலூர் போக்குவரத்து காவல் நிலையம் முன்பு நின்று என்ன செய்வதென்று யோசித்து கொண்டிருந்தேன். அப்போது உதவி ஆய்வாளர் மருதையா அவர்கள் காவல் நிலையத்திற்கு வெளியே சென்று கொண்டிருந்த போது என்னை பார்த்து அவர் தான் இப்போது வெளியே கிளம்பி விட்டதாகவும் நாளை வந்து பணத்தை கொடுத்து விட்டு வண்டியை எடுத்து செல் என்று கூறினார். மேலும் எனது நண்பர் பாலன் குடிபோதையில் வாகனம் ஓட்டியதாக சூலூர் போக்குவரத்து உதவி ஆய்வாளர் மருதையா அவர்கள் கூறுகிறார். ஆனால் அதற்கு உண்டான மது குடித்தற்க்கான டெஸ்ட் எதுவும் பாலன் அவர்களிடம் செய்யவில்லை மற்றும் அதற்கான குடிபோதைக்கான சான்று எதுவும் பெறப்படவில்லை. அதற்கான நோட்டீஸ் எதுவும் என்னிடமோ, பாலனிடமோ வழங்கவில்லை. ஆனால் உதவி ஆய்வாளர் மருதையா அவர்கள் என் நண்பர் மீது வழக்கு பதிவு செய்ததாக எங்களிடம் பொய்யாக கூறி பேரம் பேசி என்னுடைய

வண்டியை விடுவிக்க பணம் ரூ.6,000/– லஞ்சமாக கேட்கிறார். அதன் பின்பு நான் யோசித்து பார்த்ததில் எனது வாகனத்தை திருப்பி தொடுக்க சூலூர் போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் மருதையா அவர்கள் கேட்ட ரூ.6,000/– ஐ லஞ்சமாக கொடுக்க விரும்பவில்லை. எனவே லஞ்ச பணம் கேட்டு கட்டாய படுத்தும் சூலூர் போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் மருதையா என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுகொள்கிறேன். மேலும் நான் 03.02.2021 ஆம் தேதி மாலை சுமார் 06.15 மணிக்கு நான் போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் மருதையா அவர்களை அவருடைய காவல் நிலையத்தில் நேரில் சந்தித்து பேசிய போது எங்களுக்குள் நடந்த உரையாடல்களையும், நான் செல்போனில் பதிவு செய்து அதனை CD ல் பதிவிறக்கம் செய்துள்ளேன். அந்த CD ஐ தங்களிடம் தற்போது புகார் மனுவுடன் இணைத்து கொடுக்கின்றேன். இப்படிக்கு, ஒப்பம் x/x/x/x/ (R.முருகன், 04/2/2021) இடம் – கோவை, நாள் – 04.02.2021. Madam / Sir, Received the complaint on 04.02.2021 at 08.00 hrs Sd/- x-x-x-x 04.02.2021 (G.Arumugam), Inspector of Police, V&AC, Coimbatore. Madam / Sir, After conducting discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.5/2021/AC/CB u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 was registered by me on 04.02.2021 at 09.00 hrs. Sd/- x-x-x-x 4.2.2021 (G.Arumugam), Inspector of Police, V&AC Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார்மனு மற்றும் 65(B),(4)(C) of the Indian Evidence Act-1872 சான்றுடன் கூடிய Compact Disk (CD-R) ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தும், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

4/2/2021

(G.ஆறுமுகம்)
காவல்ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.